மின் கம்பிகளை புதைவடமாக மாற்ற கோரிக்கை

சென்னை, மே 2: மாதவரம், மணலி, உள்ளிட்ட பகுதிகளில் மின் கம்பிகளை புதைவடமாக மாற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மாதவரம், மணலி, திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் சில இடங்களில் மின்கம்பிகளை புதைவடமாக மாற்றும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால், பல்வேறு பகுதிகளில் மேல் நிலை மின்கம்பி வழியாகவே மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக எண்ணூர், மணலி, வடபெரும்பாக்கம், கொசப்பூர் உள்ளிட்ட பல இடங்களில் புதைவடமாக மாற்றப்படவில்லை. இதனால், இந்தப் பகுதியில் அடிக்கடி மின் வயர்கள் அறுந்து விழுந்து விபத்து ஏற்படுகிறது. மேலும், மழைக்காலங்களில் இந்த மின் கம்பிகள் பலத்த காற்று காரணமாக சேதமடைந்து, சாய்ந்து விடுவதால் மின் தடை ஏற்பட்டு பொதுமக்கள் அவதிக் குள்ளாகின்றனர்.

எனவே, மாதவரம், மணலி பகுதிகளில் புதைவடமாக மாற்றும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த மின்வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாக்கு எண்ணும் மையங்களிலிருந்து ஒரு கி.மீ. தொலைவுக்கு கட்சியினரை அனுமதிக்கக் கூடாது

தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் தவெக மனு

சென்னை, மே 2: வாக்கு எண்ணும் மையங்களிலிருந்து ஒரு கி.மீ. தொலைவுக்கு, அங்கீகரிக்கப்பட்டவர்களைத் தவிர எந்தக் கட்சி நிர்வாகிகளையும் அனுமதிக்கக் கூடாது என தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் தமிழக வெற்றிக்கழகம் மனு அளித்துள்ளது.

வாக்கு எண்ணிக்கை திங்கள்கிழமை (மே 4) நடைபெறவுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கிடம் தவெக பிரசார மேலாண்மை பொதுச் செயலர் ஆதவ் அர்ஜுனா சனிக்கிழமை மனு அளித்தார்.

இதைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

வாக்கு எண்ணும் மையங்களுக்குள் அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்க வேண்டும். ஒரு கி.மீ. தொலைவு வரை எந்தக் கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் அனுமதி வழங்கக் கூடாது. ஒவ்வொரு சுற்றின் முடிவுகளிலும் பதிவான வாக்குகளை அறிவிக்க வேண்டும். திருச்சி அருகே தவெக தேர்தல் அலுவலகத்துக்கு தீ வைத்தவர்களை போலீஸார் உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார் அவர்.

போர் நினைவிடத்தில் ஆளுநர் அஞ்சலி

சென்னை, மே 2: சென்னையில் உள்ள போர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து தேசத் துக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த வீரர்களுக்கு ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் சனிக்கிழமை அஞ்சலி செலுத்தினார்.

இதுகுறித்து ஆளுநர் மாளிகை சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசத்தின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைக் காப்பதில் முப்படையினர் வெளிப்படுத்தும் துணிச்சல், அர்ப்பணிப்பு மற்றும் தன்னல மற்ற ஈடுபாட்டுக்கு ஒரு நெகிழ்ச்சியான நினைவூட்டலாக இந்த நிகழ்வு அமைந்தது. தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து ஊக்கமளித்து வரும் தியாகிகளின் அசைக்க முடியாத மன உறுதியையும் வீரத்தையும் போற்றி வணங்குவதுடன், வீரர்கள், தியாகிகளின் ஈகையை நாட்டு மக்கள் பெருமையுடன் நினைவுகூர வேண்டும்.

மேலும்,தேசத்தைக்கட்டமைப்பதில் தங்களுக்குள்ள கூட்டுப் பொறுப்பை மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் வலியுறுத்தியுள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில், இந்திய ராணுவத்தின் தென் பாரதப் பகுதி அதிகாரி மற்றும் சென்னையைச் சேர்ந்த உயரதிகாரிகள், படை அதிகாரிகள் கலந்துகொண்டு, வீரத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

சென்னை போர் நினைவுச் சின்னத்தில் சனிக்கிழமை மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர்.

12 ரயில்வே கடவுப் பாதைகள் அகற்றம்

சென்னை, மே 2: தண்டவாளங்களில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க கடந்த நிதியாண்டில் சென்னை ரயில்வே கோட்டத்துக்குள்பட்ட 12 கடவுப் பாதை கதவுகள் (ரயில்வே லெவல் கிராசிங் கேட்டுகள்) அகற்றப்பட்டு, மாற்றுப் பாதைகள் அமைக்கப் பட்டுள்ளன.

இதுகுறித்து சென்னை கோட்டம் ரயில்வே சார்பில் சனிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

கடந்தநிதியாண்டில்சென்னை ரயில்வே கோட்டத்துக்குள் பட்ட முக்கிய ரயில் பாதைகளில் இருந்த வாலாஜா சாலை முகுந்தராயபுரம், காட்பாடி-லத்தேரி, லத்தேரி-காவனூர், காவனூர் பணிமனை, குடியாத்தம்-வளத்தூர், ஜோலார்பேட்டை- சோமநாயக்கன்பட்டி, பல்லாவரம் - தாம்பரம் உள்பட 12 ரயில்வே கடவுப் பாதை கதவுகள் அகற்றப் பட்டுள்ளன.

இதற்கு மாற்றாக 7 சுரங்கப் பாதைகள், 3 மேம்பாலங்கள், ஒரு கீழ்ப்பாலம், ஒரு மாற்றுப்பாதை அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், ரயில் தண்டவாளங்களில் விபத்துகள் குறைந்து பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப் பட்டுள்ளது.

மேலும், ரயில்வே தடுப்புகளில் வாகனங்கள் காத்திருக்க வேண்டிய சூழல் இல்லாததால், சாலைப் போக்குவரத்து நெரிசல் குறைந்து, வாகன ஓட்டிகளின் பயண நேரம் சேமிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸார் பாதுகாப்பு

சென்னை, மே 2: தமிழகத்தில் திங்கள்கிழமை (மே 4) வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளதை முன்னிட்டு, மாநிலம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த ஏப்.23-ஆம் தேதி நடைபெற்றது. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்குஅனுப்பிவைக்கப்பட்டன. தமிழகம் முழுவதும் உள்ள 62 மையங்களில் வாக்கு எண்ணிக்கை திங்கள்கிழமை (மே 4) நடைபெறவுள்ளது. இந்த மையங்களில் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் துணை ராணுவத்தினரும், இரண்டாம் அடுக்கில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரும், மூன்றாம் அடுக்கில் ஆயுதப் படையினரும், நான்காவது அடுக்கில் உள்ளூர் போலீஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். வாக்கு எண்ணும் மையங்களில் தற்போது 10,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கை நடைபெறும் போது மட்டும் சுமார் 40,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவார்கள்.

மேலும், திமுக, அதிமுக, தவெக, நாதக உள்ளிட்ட முக்கிய கட்சி வேட்பாளர்களின் அலுவலகங்கள், வீடுகள், கட்சித் தலைமை அலுவலகங்கள் 60,000 போலீஸார் பாதுகாப்பிலும் ரோந்துப் பணியிலும் ஈடுபட உள்ளனர். அதன்படி தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனர். இதற்கான பணிகளை காவல் துறை தலைவர் சந்தீப்ராய் ரத்தோர் கண்காணித்து வருகிறார்.

சென்னையில் 22,000 போலீஸார்..

சென்னை பெருநகர காவல் எல்லைக்குள் பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் ராணிமேரி கல்லூரி, லயோலா கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய 3 வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்புப் போடப் பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, சென்னை மாநகர காவல் ஆணையர் அபின் தினேஷ்மோதக் உத்தரவின்பேரில் திங்கள்கிழமை (மே 4) சென்னை மாநகர் முழுவதும் கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள், சிறப்பு காவல் படை, ஆயுதப்படை, மத்திய ஆயுதப் படை பிரிவைச்சேர்ந்த காவலர்கள் என மொத்தம் 22,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வாக்கு எண்ணும் மையங்களில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

- தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை இல்லாமல் யாரும் வாக்கு எண்ணும் மையத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்தின் நுழைவு வாயிலிலும் உயரதிகாரிகள் பணியில் இருப்பார்கள்.
- ஊடகத்தினர், கேமராக்கள் அல்லது விடியோ கேமராக்களை வாக்கு எண்ணும் மையத்துக்குள் கொண்டு செல்லக் கூடாது. இருப்பினும், தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அங்கீகார அட்டைகளைக் கொண்ட ஊடகத்தினர் கையடக்கக் புகைப்பட கேமராக்கள், விடியோ கேமராக்களுடன் வாக்கு எண்ணும் மையங்களில் குறிப்பிட்ட எல்லை வரை அனுமதிக்கப்படுவர்.
- தேர்தல் பார்வையாளரைத் தவிர வேறு யாரும் வாக்கு எண்ணும் அரங்குக்குள் கைப்பேசி கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- கூர்மையான பொருள்கள், தீக்குச்சிகள், கம்பிகள், லைட்டர்கள், வெடிபொருள்கள், எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்கள், பிற மின்னணு சாதனங்கள் கொண்டு வர அனுமதியில்லை.
- தனிநபர்கள், உள் மற்றும் வெளிப் பாதுகாப்பு வளையத்துக்கு இடைப்பட்ட பகுதியில் குடிநீர் அருந்த வாக்கு எண்ணும் மையத்திலிருந்து வெளியே வர அனுமதிக்கப்படுவார்கள். மீண்டும் உள்ளே நுழையும்போது முழுமையாகச் சோதனையிடப்படுவார்கள். முகவர்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறியவுடன், அவர்கள் மீண்டும் உள்ளே நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- மதுபோதையில் யாரும் வாக்கு எண்ணும் மைய வளாகத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

SBI பாரத ஸ்டேட் பாங்கு

RBO 2, சென்னை CBD, 2 வது தளம், 231, NSC போஸ் சாலை, சென்னை - 600 001

வளாகங்கள் குத்தகைக்குத் தேவை

பாரத ஸ்டேட் பாங்கு, சென்னை - அண்ணாநகர் கிழக்கு கிளைக்கு, குத்தகை அல்லது வாடகை அடிப்படையில், தோராயமாக 232 சதுர மீ (அதாவது 2500 சதுர அடி) தேவை. கட்டி முடிக்கப்பட்ட அல்லது கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது கட்டப்பட விருக்கும் வணிகக் கட்டிடம் தாராளமான வாகன நிறுத்துமிட வசதியுடன் கூடிய தரை தளத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இட்ட ஏல விண்ணப்ப முறைப்படி குறிப்பிடப்பட்ட படிவத்தில் ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் விவரங்களுக்கு, வங்கியின் இணையதளம் https://sbi.bank.in இன் "SBI in the News: Procurement news" இன் கீழ் காணவும். ஏல ஒப்பந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க கடைசி தேதி: 25.05.2026 மற்றும் நேரம்: பிற்பகல் 3.00 மணி வரை. திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே பதிவிடப்படும்.

தேதி: 03-05-2026 மண்டல மேலாளர்

ஞாயிற்றுக்கிழமைதோறும்

தினமணி கதிர்

இளமை! புதுமை! இனிமை!

டச்சு பேங்க் AG

பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனை

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் ("மேற்சொன்ன சட்டம்")- இன் கீழ் இதன் கிழக்கையொப்பமிட்ட நபர் தமது பல்வேறு வியாபார அலுவலகங்களில் ஒன்றை #. 4-4A, வெஸ்டர்ன் டவர், சன்னி சைட், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 என்ற முகவரியில் கொண்டுள்ள M/s. டச்சு பேங்க் AG ("டச்சு பேங்க் AG") இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(2) – இதனுடன் தொடர்புடைய- கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை மீதான உரிமைகள் (அமலாக்கம்) விதிகள்'2002 ("மேற்சொன்ன விதிகள்) இன் விதி 9 இன் கீழ் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தின் படி, **14.03.2025** நாளிடப்பட்ட கோரிக்கை அறிவிப்பை கடன்தார்(கள்) / கூட்டு கடன்தார்(கள்) **M/s Hygene Enviro Pvt Ltd., ("கடன்தாரர்"), திரு. K செந்தில்நாதன் (கூட்டுக் கடன்தாரர்) திருமதி. R ராஜிமதி (கூட்டுக் கடன்தாரர்)** ஆகியோருக்கு அனுப்பி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகை **ரூ.1,11,90,854.26 (ரூபாய் ஒரு கோடியே பதினொரு லட்சத்து தொண்ணூறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து நான்கு மற்றும் இருபத்தாறு பைசா மட்டும்)** மற்றும் அதற்கான வட்டி சேர்த்து மேற்சொன்ன அறிவிப்பைப் பெற்ற தேதியிலிருந்து 60 நாள்களுக்குள் திருப்பி செலுத்த கோரினார்.

கடன்தாரர் அத்தொகையை திருப்பி செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரருக்கும், மற்றும் பரவலாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதன் கீழ்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ் விவரிக்கப்பட்டு, வங்கிக்கு அடமானம் செய்துள்ள சொத்தை மேற்சொன்ன நிலுவைத்தொகையை வசூலிப்பதற்காக, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(4) – அதற்குத் தொடர்புடைய - மேற்சொன்ன விதிகளில் விதி 8 ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி 31.12.2025 நாளன்று நேரடி சுவாதீனம் எடுத்துள்ளார்.

தற்போது, பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ்குறிப்பிடப்பட்ட சொத்து, மூடிய உறையிலிட்ட விலைப்புள்ளிகளை வரவேற்பதன்மூலம், பொது ஏலத்தில் இருக்கின்ற இடத்தில் மற்றும் இருக்கின்ற நிலையில் என்ற அடிப்படையில், இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிய செயல்முறைகளின் படியும் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியும், **2026 ஜூன் 11 ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு** டச்ச பேங்க் AG, #. 4-4A, வெஸ்டர்ன் டவர், சன்னி சைட், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 என்ற முகவரியில் விற்பனை செய்யப்படும்.

வ. எண்.	கடனீட்டு சொத்து முகவரி	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல நாள்
1.	இன்றியமையாப் பகுதிகள் மற்றும் பாகங்கள் அனைத்துடனும் கூடிய அடுக்ககம். "ரமணியம் சைதன்யா" என அறியப்பட்ட கட்டடத்தின் மூன்றாவது தளத்தில் உள்ள எண் C-314 இல் 1133 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது. இதனுடன் 80854 சதுர அடி நிலத்தின் ஓர் அங்கமாக 509.08 சதுர அடி பிரிபடாப்பங்கு அமையப்பெற்ற சர்வே எண் 41, 87 பாகம், 88 பாகம் மற்றும் 89 (சர்வே எண்கள் 41/1, 41/2, 87/1B, 88/1B & 89 பட்டாவின்படி), நெற்குன்றம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில். நெற்குன்றம் சாலையில் (மாதா தேவாலயச் சாலை என்றும்கூட அறியப்படுகிறது) விற்பனையாளரால் தக்கவைக்கப்பட்டுள்ள நில பாகத்தின் அருகில், மூர்த்தி நகரில் CMDA ஆல் திட்டமிடப்பட்டுள்ள இணைப்பு சாலையில் அமைந்துள்ளது. நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சர்வே எண் 40-இல் உள்ள சொத்து, தெற்கு: நெற்குன்றம் சாலையில் (மாதா தேவாலயச் சாலை என்றும்கூட அறியப்படுகிறது)விற்பனையாளரால் தக்கவைக்கப்பட்டுள்ள நில பாகத்தின் அருகில் மூர்த்தி நகரில் CMDA ஆல் திட்டமிடப்பட்டுள்ள இணைப்பு சாலை, கிழக்கு: கோயம்பேடு கிராமம், RS எண் 71-இல் உள்ள சொத்து, மேற்கு: சர்வே எண் 87/1A, 88/1A & 40 ஆகியவற்றில் உள்ள சொத்து. இது விருகம்பாக்கம் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.	ரூ.75,10,000/-	ரூ.7,51,000/-	11.06.2026

சொத்து தொடர்பான விபரங்கள் யாவும், வங்கிக்கு தெரிந்த சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில் கூறப்பட்டவையாகும்., எனினும் மேற்சொன்ன விபரங்களில் ஏதேனும் பிழையோ, தவறான கூற்றோ அல்லது விடுபடல்களோ இருப்பின் அதற்கு வங்கி பொறுப்பல்ல. ஒப்பந்தப்புள்ளிதாரர்(கள்)/விலைகோருபவர்/கள் / ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர்/கள் ஆகியோர் தங்களது சுய விருப்பில், சொத்து தொடர்பாக தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, தம்மளவில் திருப்தி ஏற்படுத்திக்கொள்ளுமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வங்கியின் சிறந்த அறிவுக்கு எட்டிய வரையில், சொத்து மீது எந்த வில்லங்கங்களும் இல்லை., மேலும் சொத்தை முறையாக சட்டரீதியான செயல்முறைகளை பின்பற்றி விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பொது ஏலத்துக்கான விதிகள் & நிபந்தனைகளாவன:

1. சொத்து ஆய்வு நாள்: 11.05.2026 **நேரம்:** காலை **11.00 மணி முதல் மாலை 03.00வரை** . விலைப்புள்ளிகளை, கீழ்கையொப்பமிட்ட நபரின் அலுவலகத்துக்கு மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு, "M/s. Deutsche Bank AG EMD" என்ற பெயருக்கு - **ரூ. 7,51,000/- (ரூபாய். ஏழு லட்சத்து ஐம்பத்து ஓராயிரம் மட்டும்)** என்ற தொகைக்கான கேட்பு வரைவோலை / செலுத்து ஆணை ஆக எடுக்கப்பட்ட டேவணித்தொகையுடன் சேர்த்து, டச்ச பேங்க் AG, எண். 4-4A, வெஸ்டர்ன் டவர், சன்னி சைட், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 என்ற முகவரிக்கு **10.06.2026 ஆம் தேதியன்று மதியம் 02.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். டேவணித்தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது. விலைப்புள்ளி படிவத்துடன் ஆர்வமுள்ள ஏலதாரர் தமது அடையாளச் சான்று, குடியிருப்பு சான்று (அஃதாவது கடவுச்சீட்டு, தேர்தல் ஆணைய அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுனர் உரிமம் போன்றவை) மற்றும் வருமான வரித்துறையால் வழங்கப்பட்ட நிரந்தர கணக்கு அட்டை' ஒன்றின் நகலையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

2. விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டேவணித்தொகையை வலைதளம் http://www.bankeauctions.com மூலமாகவும் சமர்ப்பிக்கலாம். (பயனாளி முகவரி & கடவுச்சொல் ஆகியவற்றை வலைதளம் http://www.bankeauctions.com ல் தங்களது பெயர்களை பதிவு செய்து கொண்டு இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்) டேவணித்தொகையானது NEFT மூலம் கணக்கு எண். 078494027010068, கணக்கு பெயர் - Deutsche Bank AG EMD, பயனர் பெயர் - Deutsche Bank AG, IFSC -DEUT0784PBC க்கு செலுத்தப்பட வேண்டும். ஏலதாரரால் (ஒரு முறை) வலைதளத்தில் பதிவு செய்யப்பட்ட பிறகு, விருப்பமுள்ள ஏலதாரர் / வாங்குபவர் பின்வரும் ஆவணங்களின் நகல்களை வலைதளத்தில் **10.06.2026 ஆம் தேதியன்று மதியம்** 02.00 மணி அல்லது அதற்கு முன்பு (விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்) பதிவேற்றம் செய்ய வேண்டும்., அவையாவன i). NEFT / RTGS சலான் அல்லது கேட்பு வரைவோலை நகல் ii). PAN அட்டை நகல் iii). அடையாள சான்று / முகவரி சான்று (KYC) அஃதாவது வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / கடவுச்சீட்டு போன்றவற்றின் சுய சான்றொப்பம் செய்யப்பட்ட நகல்; இவையன்றி வரப்பெறும் விலைப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். மேலும் முறையாக நிரப்பப்பட்டு, கையொப்பமிடப்பட்ட பிற்சேர்க்கை II & III (இவற்றை வலைதளம் யிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்) ஆகியவற்றின் ஒளி வருடப்பட்ட நகல்களை பதிவேற்றம் செயவதும் அவசியம்.

3. முறையாக நிரப்பப்படாத விலைப்புள்ளிகள் அல்லது டேவணித்தொகையல்லாத விலைப்புள்ளிகள் அல்லது இதில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய தேதி மற்றும் நேரத்துக்கு பிறகு பெறப்படும் விலைப்புள்ளிகள் கணக்கிலெடுத்துக்கொள்ளப்படமாட்டா. / மதிப்பற்றதாகவே கருதப்படும்., அதனால் அவை நிராகரிக்கப்படும். டேவணித்தொகைக்கு எந்த வட்டியும் கொடுக்கப்படமாட்டாது.

4. உள்நுழை முகவரி & கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலும், தரவுகளை பதிவேற்றம் செய்வதிலும், விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதிலும் உதவி தேவைப்படுவோர் மற்றும் இணையவழி உள்ளூரு ஏல விலைகோரலில் பயிற்சி / செயல்முறை விளக்கம் தேவைப்படுவோர், M/s. C1 India Pvt Ltd., உத்யோக் விஹார், ஃபேஸ் 2, கல்ஃப் பெட்ரோகெம் பில்டிங், பில்டிங் எண். 301, குர்கான், ஹரியாணா-122015 மின்னஞ்சல் முகவரி - support@bankeauctions.com, உதவிக்கான எண்கள். 124-4302020 / 21 / 22 / 23, 7291981124 / 1125 / 1126, விற்பனைக்கான விசாரணைகளுக்கு sales@bankeauctions.com, 72919 81129 யை மற்றும் திரு.பிரபாகரன் - 7418281709 ஆகியனவற்றை தொடர்பு கொள்ளலாம். இணைய நெட்வொர்க் பிரச்சினை ஏதேனும் ஏற்படுமாயின் அதற்கு அதிகாரப்பூர்வ அலுவலரோ / வங்கியோ அல்லது M/s. C1 India Pvt Ltd நிறுவனமோ பொறுப்பல்ல, மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள், மின்னணு ஏலத்தில் பங்கேற்க, தாங்கள் தொழில்நுட்ப ரீதியாக நன்கு தயார்நிலையில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

5. இணையவழி உள்ளூரு விலைகோரலில், ஏலதாரர் தமது விலைத்தொகையை விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை **ரூ. 50,000/- (ரூபாய். ஐம்பதாயிரம் மட்டும்)** அல்லது அதன் மடங்குகளில் அதிகரிக்கலாம்., மேலும் மின்- ஏலம் முடிவுறுவதற்கு கடைசி 5 நிமிடத்தில் விலைப்புள்ளி கோரப்பட்டால், முடிவுறு நேரம் தன்னியல்பாகவே 5 நிமிடம் (மின் - ஏல செயல்முறை முடிவுறும் வரை ஒவ்வொரு முறையும்) அதிகரிக்கப்படும்., அல்லது அது தானாகவே முடிவுறும். மின் - ஏல செயல்முறை முடிவில் அதிகபட்ச விலைகோரிய ஏலதாரரை (குறைந்தபட்ச கேட்பு விலைக்கு குறைவிலாத), தேவையான சரிபார்ப்புக்கு பிறகு, அதிகாரப்பூர்வ அலுவலர் / ஈடு பெற்று கடனளித்தவர் வெற்றி பெற்ற ஏலதாரராக அறிவிப்பார்.

6. வெற்றி பெற்ற ஏலதாரரின் டேவணித்தொகையானது விற்பனை விலைத்தொகையின் ஒரு பாகமாக கருதி வைத்துக்கொள்ளப்படும்., மேலும் வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித்தொகை திருப்பி தரப்படும். டேவணித்தொகைக்கு வட்டி எதும் கிடையாது. வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை விலைத்தொகையில் 25% யை (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகையை கழித்து) அதிகாரப்பூர்வ அலுவலரால் விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்ட 24 மணி நேரத்துக்குள் செலுத்த வேண்டும்., மேலும் விற்பனை விலைத்தொகையில் மீதி 75% தொகையை சொத்து விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 வது நாள் அல்லது அதற்கு முன்போ அல்லது தொடர்புடைய அலுவர்களால் எழுத்து பூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்ட காலக்கெடுவுக்குள் செலுத்த வேண்டும். மொத்த விலைத்தொகையையும் உரிய காலக்கெடுவுக்குள் செலுத்த தவறும் பட்சத்தில், வாங்குநரால் செலுத்தப்பட்ட டேவணித்தொகை மற்றும் / அல்லது இதர தொகைகளை அபராதமாக கருதி கழித்துக்கொள்ளவும், சொத்தை மறு ஏலம் விடவும் வங்கிக்கு உரிமை உள்ளது. வாங்குவதில் தவறிழைத்த நபருக்கு சொத்து மீதோ அல்லது அதன்பிறகு சொத்தை விற்பனை செய்து பெறப்படும் தொகை மீதோ எந்த கோரிக்கையும் எழுப்ப உரிமையில்லை.

7. ஏலதாரர்கள் தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கும் மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கும் முன்பே M/s. C1 India Pvt Ltd., ன் வலைத்தளமான https://www.bankeauctions.com மற்றும் https://www.deutsche.bank.in/en/auction-notices.html என்ற டச்ச வங்கியின் வலைத்தளத்தில் உள்ள மின் - ஏலத்தின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் , பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. வாங்குபவரால் செலுத்தப்படும் அனைத்து தொகைகளும் "Deutsche Bank AG" என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை / செலுத்து ஆணை மூலமாகவே செலுத்தப்பட வேண்டும்.

9. விற்பனை விலைத்தொகை முழுவதையும் பெற்ற பிறகு, வங்கியானது வாங்குநர் / அவரது நியமனதாரர் பெயரில் விற்பனை சான்றை வழங்குவதோடு, சொத்தை வாங்கியவரின் வசம் சுவாதீனம் ஒப்படைப்பார்.

10. பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்சொன்ன அசையாச் சொத்து, இதன் கீழ்கையொப்பமிட்ட அதிகாரப்பூர்வ அலுவலரால் விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து, அனைத்து விதத்திலும் அதாவது இழப்பு அல்லது சேதம் அல்லது நெருப்பு அல்லது திருட்டு அல்லது இதர விபத்துகள் மற்றும் இதர அபாய நேர்வுகளுக்கும் வாங்கியவரின் முழுப் பொறுப்பிலேயே இருக்கும். வாங்கியவர் எந்த காரணத்துக்காகவும், விற்பனையை ரத்து செய்ய உரிமையில்லை.

11. நடைமுறையில் , மேற்சொன்ன சொத்து "இருக்கின்ற இடத்தில் மற்றும் இருக்கின்ற நிலையில்" என்ற கறாரான அடிப்படையிலேயே விற்பனை செய்யப்படும். வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில் சொத்து மீது எந்த வில்லங்கமும் இல்லை.

12. சொத்துக்கான முத்திரை தீர்வை, பதிவு கட்டணங்கள், உரிமை மாற்ற கட்டணங்கள் மற்றும் இதரக் கட்டணங்கள் போன்றவற்றை வாங்குநரே ஏற்றுக்கொள்ள வேண்டும். சொத்து மீதான நகராட்சி வரிகள், நிர்வாக / சமூக கட்டணங்கள், மின் மற்றும் தண்ணீர் கட்டணங்கள், மேல் வரி அல்லது இதர நிலுவைகள் அனைத்தையும் வாங்குவதில் வெற்றி பெற்ற நபரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

13. வங்கியானது அதிகபட்ச விலைப்புள்ளி அல்லது ஏதேனும்